1971 ஜூலை 8]

திருப்பூரில் அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டம்.

* 164 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூரில், அரசு ஊழியர்கள் வாடகைத் திட்டத்தின் கீழ் வீட்டு வசதி வாரியம் 1970-ம் ஆண்டில் வீடு கட்ட அரசு பணம் ஒதுக்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய்?

(உ) மேற்படி வேலை துவக்கப்பட்டு விட்டதா?

(எ) இல்லை எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (இ); (உ) & (எ) ஆம். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், திருப்பூரில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 9.94 லட்ச செலவில் 96 அங்கணங்கள் கட்டுவதற்கான திட்டத்தை அனுப்பினர். அவர் இத் திட்டத்திற்குரிய வேலைகளை அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து முன்னதாகவே ஆரம்பித்து விட்டார்.

திரு. சு. துரைசாமி: மேற்படி இடத்தில் வீடு கட்டும் திட்டத்திற்காக கடந்த ஆண்டு 3 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தை முடிக்க 9 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்த நடைமுறை ஆண்டில் அதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கி வீடுகளை அரசு விரைவில் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதற்கான அடிக்கல் நாட்டு விழா சமீபத்தில் நடைபெற்றிருக்கிறது. திட்டப்படி அந்த வேலைகள் முடியும். அரசாங்கச் செலவுகள் வேலைமுறைப்படி செய்யப்படும்.

சென்னை மாநகரில் மின்சார பஸ்கள்.

* 165 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் மின்சார பஸ்கள் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தற்போது ஓடிக் கொண்டிருக்கும் பஸ்களினால் நகரத்தில் அதிகமான புகை சூழவும், இரைச்சல் ஏற்படவும் காரணமாக இருப்பதால் புதிதாக மின்சார பஸ்கள் விடப்பட்டால் அத்தகைய தொல்லைகள் போக்கப்படுவதோடு கூட அதிக வேகத்திலும் செல்ல வகை ஏற்படும் என்ற காரணத்தால் அத்தகைய பஸ்களை விட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்சார பஸ்கள் விடுவது என்பது இப்போது நம் நாட்டில் சாத்தியமில்லை. அயல்நாடுகளில் கூட மின்சாரத்தைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவது பற்றிய

ஆய்வினை இப்போதுதான் மேற்கொண்டிருக்கிறார்கள். இலண்டனில் பால் வழங்கும் ஊர்திகளுக்குத்தான் இந்த மின்சாரம் பயன்படுத்தப் படுகிறது. ஆகையால் அதற்குக் காலம் கனிந்து வரவேண்டும். விஞ்ஞானத்தில் மேம்பாடு அடைய வேண்டும். அப்படி எல்லாம் ஏற்படுமானால் ஒரு காலத்தில் மின்சாரத்தைக் கொண்டு இப்பேருந்துகளை ஓட்டும் நாள் வரலாம்.

திரு. கோவை செழியன் : மின்சார பஸ்கள் என்று சொல்லு கிறார்கள். அப்படியானால் அது பாட்டரியில் ஓடுகிற பஸ்களா அல்லது டிராம்களைப் போல் டயர்களை எடுத்துவிட்டு ஒரே லைனில் ஓடுகிற பஸ்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்போது லண்டனில் ஓட்டுவதெல்லாம் பாட்டரியில்தான் ஓட்டுகிறார்கள். இரவு நேரங் களில் பாட்டரியை சார்ஜ் செய்து பகலில் ஓட்டுகிறார்கள். குறைந்த தூரத்திற்குத்தான் பயன்படுத்துகிறார்கள். மற்ற வகையான சக்திகளைப் பயன்படுத்த விஞ்ஞான வளர்ச்சி தேவை.

திரு. இராம. அரங்கண்ணல் : ஜெனீவா போன்ற முன்னேற்ற மடைந்த நாடுகளில் இப்போது மின்சார பஸ்கள் விடப்பட்டு வருகின்றன. இவைகளில் உள்ள ஒரு சாதகம் தற்போது எந்த இடத்தில் வேண்டுமானாலும் பஸ்கள் ரோடுகளில் செல்லலாம் என்று இல்லாமல் ஒரே பாதையில்தான் செல்ல முடியும் என்ற சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அரசு இதுகுறித்து தீவிரமாக ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு இது குறித்தும் தீவிரமாக ஆலோசிக்கும்.

திரு. முனு ஆதி : சென்னை நகரத்தில் மக்கள் நெருக்கடி அதிகமாக இருப்பதால் பழையபடி டிராம்களை விடும் யோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டிராம்களை விடும் யோசனை எதுவும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : டிராம்கள் நிறுத்தப்பட்ட உடனே பல நாடுகளில் நகரங்களில் டிராலி பஸ்கள் விடுகிறார்கள். டிராலி பஸ்கள் மின்சாரத்தில் ஓடுகின்றன. அது சவுகரியமாக இருக்கிறது. பெரிய ரோடுகளில் டிராலி பஸ்கள் விடுவது உதவிகரமாக இருக்கு மென்ற காரணத்தால் அதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டிராலி பஸ்கள் விடுவ திலும் மாண்புமிகு அரங்கண்ணல் அவர்கள் தெரிவித்த யோசனை தான் இடைஞ்சலாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியன் : கல்கத்தாவில் இப்போது பாதாள ரயில் விட ஆலோசனை செய்து வருகிறார்கள். சென்னையிலும் அது பற்றிய ஆலோசனை இருப்பதாக கூறப்பட்டதே. இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

1971 ஜூலை 8]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

DR. H. V. HADDE : Sir, is it not a fact that after we got rid of the trams, we are not able to solve the transport problem? Now that the Engineer--Minister has come into the field, may I know what concrete steps he is going to take to solve the awful transport problem especially in view of the fact that we do not have trams and consequently a considerable amount of transport facilities has been cut down ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The contention of the hon. Member that the services rendered by the State Transport are not sufficient, is not correct because we have taken long term as well as short term measures. As regards long term measures, a Maintenance Wing has been organised with the assistance of an Assistant Engineer of Ashok Leyland who has been studying the various aspects of the matter including the staff pattern and the way in which the depot has to be organised. According to it, each depot will have about 100 vehicles which will be divided into four groups of 25 vehicles each and these 25 vehicles also will be sub-divided into 12 and 13 so that 12 vehicles will form one group and it will be maintained by the Maintenance Wing. As regards traffic, we have recently constituted a Committee with Prof. Ayyaswami, Head of the Department of Traffic Engineering, Guindy, to be assisted by one Deputy Director from the Transport Department and another officer from the Statistical Wing so that the traffic intensity in the various routes and different regions and the traffic intensity in the various timings of the day can be rationalised and effective and optimum use of the vehicles can be made. To-day, I think out of about 1,000 buses only 123 buses are under repairs and we all hope to achieve cent per cent efficiency by August 31st.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் தீர்மானம்.

காவிரி நீர்த் தகராறுகளை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுதல் குறித்தும், மைசூர் அரசு தொடர்ந்து திட்டங்களை நிறைவேற்றுவதைத் தடை செய்வதன் அவசியம் குறித்தும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்கிற ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து அனைத்துக் கட்சியினுடைய